1991 செப்டம்பர் 23]

மிகு அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய கடற்கரைப் பகுதியில் இறால் மீன் வளர்ப்பதற்கான என்னென்ன திட்டங்கள் வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கான தனிக் கேள்வி போட்டால் அரசு பதில் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் காவிரி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. துணை வினா அந்த மாதிரி வராது.

குறுகிய கால வினா எண். 1. திரு. எஸ். டேனியல்ராஜ். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

சிதம்பரனார் மாவட்டத்திற்கு நீதிமன்றங்கள்

கு.கா. 1 —

* 3561 திரு. எஸ். டேனியல்ராஜ்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதியதாக அமைக்கப்பட்டுள்ள சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடியில் மாவட்ட சிவில், கிரிமினல் நீதிமன்றங்கள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலியில் தற்போது செயல்பட்டு வருகின்ற கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை தூத்துக்குடிக்கு மாற்றி சிதம்பரனார் மாவட்டத்திற்காக மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்றை அமைக்க 1991-ஆம் ஆண்டு சனவரித் திங்கள், 18-ம் நாள் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை தூத்துக்குடியில் அமைக்கும் நேர்வு உயர்நீதிமன்றத்துடன் கடிதப் போக்குவரத்திலுள்ளது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட பின்பு 19—9—1986

[1991 செப்டம்பர் 23

அன்று மாவட்டத்திலே ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று, அதற்கு அதிகார வரம்பெல்லாம் வரையறுக்கப் பட்டது. பின்பு அது காலதாமதம் ஆன காரணத்தால், தூத்துக்குடியில் இருக்கிற வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம், போராட்டம் ஆகியவற்றில் ஈடுபட்டதன் விளைவாக 18—1—1991-ஆம் தேதியன்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு பணியாளர்கள் நியமனம், சம்பளம் எல்லாம் வரையறுக்கப் பட்டு, பட்ஜெட்டை எதிர்பார்க்காமல் வைப்புத் தொகையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றெல்லாம் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அப்பொழுது, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தினுடைய,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டேனியல்ராஜ், கேள்வி குறுகியகால வினா. 'டைரக்ட்'-ஆகக் கேள்விக்கு வரலாம்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: நெல்லை - கட்டபொம்மன் மாவட்டத்தினுடைய மாவட்ட நீதிபதி திரு. ஜெயராமன் அவர்கள் தற்போது இயங்கிக்கொண்டு இருக்கிற நீதிமன்ற கட்டிட வளாகத்திலேயே இந்த நீதிமன்ற கட்டிடத்தை ஆரம்பிக்கலாம் என்று அரசுக்கு ஒரு பரிந்துரை அனுப்பினார்கள். ஆனால் இந்த ஆணையிலே ஏதோ பழைய கட்டிடம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டேனியல்ராஜ், நீங்கள் கேள்விக்கு வாருங்கள். நீங்கள் 'கரெக்ட்'-ஆக என்ன துணைக் கேள்வி என்பதைக் கேளுங்கள். அமைச்சர் ஒரு பதில் வழங்கி இருக்கிறார்கள். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: பழைய கட்டிடத்திலேயே இந்த நீதிமன்றத்தை ஆரம்பிக்கலாம் என்று அவர்கள் அறிவுரை வழங்கி, அந்த பழைய கட்டிடம் ஏற்கெனவே பாழடைந்த கட்டிடம் என்றும், அது லாயக்கற்றது என்றும், தடை செய்யப்பட்ட காரணத்தினால் புதிய நீதிமன்றக் கட்டிடத்தினுடைய வளாகத்திலேயே இதை அமைக்க வேண்டுமென்று நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்தார்கள். அதை ஏற்று அரசு இப்போது மாவட்ட நீதிமன்றத்தை உடனே அமைப்பதற்கு ஒரு நாளை அறிவிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய

1991 செப்டம்பர் 23]

கட்டளையின்படி தூத்துக்குடியில் அதுவும் எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள்.

முற்பகல் 10–05

வ.உ.சி. அவர்கள் பெயரால் ஒரு மாவட்டம் அமைவது மட்டுமல்ல. நீதிமன்றமும் அங்கே அமைய வேண்டும். ஒன்று ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட், இரண்டாவது ஜுடிஷியல் டிஸ்ட்ரிக்ட். மாவட்டத்தினுடைய தலைநகரம் அங்கே இருக்க வேண்டும். அந்த மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில் குறிப்பாக தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றங்கள், செஷன்ஸ் கோர்ட் இருக்க வேண்டுமென்று அன்றைக்கே விரும்பினார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் கட்டளைக்கிணங்க கடந்த 17—9—1991 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களிடத்தில் தொடர்புகொண்டு, அங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி—ரெஜிஸ்ட்ராரை அழைத்து, இங்கேயிருக்கிற ஹோம் செகரட்டரி, பைனான்ஸ் செகரட்டரி ஆகிய இந்த நீதி மன்றம் அமைப்பதற்குரிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எல்லாம் அழைத்து என்னுடைய அறையில் 17—9—1991-ஆம் நாள், ஒரு ஏழு நாட்களுக்கு முன்பு கூடி கலந்துபேசி இரண்டு மணி நேரம் பேசி, நீதிமன்றம் என்ன சொல்கிறது, அரசு என்ன சொல்கிறது, எப்படி விரைவில் தூத்துக்குடியில் நீதிமன்றம் வரவேண்டுமென்பதற்கு தீர்க்கமான முடிவை எடுத்திருக்கிறோம்.

இரண்டைக் கேட்டார்கள். ஒன்று கட்டிடம், இரண்டாவது ஸ்டாப்-பணியாளர்கள். இந்த இரண்டில் ஒரு சுமூகமான முடிவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய கட்டளையின்படி, நிதிச் செயலாளர், உள்துறை செயலாளர், சட்ட அமைச்சர் ஆகிய நாங்கள் மூன்று பேரும் நீதிமன்றத்திற்கு சொல்லி இன்றைக்கு அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாக ஏறத்தாழ நான்கு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் ரூபாய் தொடரும் செலவு—ஆண்டு தோறும் நான்கு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் ரூபாய் ஆகிறது. அதையும் ஏற்றுக்கொண்டு, நிதிச்செயலாளர் ஏற்றுக்கொண்டு, உள்துறை செயலாளர் ஏற்றுக் கொண்டு, உயர்நீதிமன்றத்தினுடைய சார்பாக ரெஜிஸ்ட்ரார் ஏற்றுக்கொண்டு நல்ல முடிவு ஏற்பட்டுள்ளது. ஆகவே, கட்டிடப் பிரச்சினையும் தீர்ந்தது. ஸ்டாப் பிரச்சினையும் தீர்ந்தது. விரைவில் வ.உ.சி. மாவட்டத்தில், தூத்துக்குடியில் இந்த நீதிமன்றங்கள் வரும்.

[1991 செப்டம்பர் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தூத்துக்குடி கோர்ட்களில் ஒன்பது ஆண்டுகளாக வழக்கறிஞராக இருக்கிறேன். வழக்கறிஞர்களும், பொதுமக்களும் செஷன்ஸ் கோர்ட்டுக்கு திருநெல்வேலிக்கு அலைவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இந்த கோர்ட்டுக்கான புதிய கட்டிடம் அனைத்தையும் கட்டுவதற்கு முடிவெடுத்துள்ளது. புரட்சித் தலைவர் அரசு பப்ளிக் பிராசிகியூட்டரைக் கூட நியமனம் செய்து, அப்படியிருந்தும், இன்னும் சில நீதிபதிகளும், ஸ்டாப்பும் நியமனம் செய்தால் மாவட்ட நீதிமன்றம் தூத்துக்குடியில் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, இந்த ஆண்டாவது சுப்ரீம் கோர்ட்டில் பெர்மிஷன் பெற்று, தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அரசு 17-ஆம் தேதி ஸ்டாப் பிரச்சினையை முடித்து விட்டது. பில்டிங் பிரச்சினையை முடித்து விட்டது. கட்டிடப் பிரச்சினையை முடித்துவிட்டது. ஆகவே, அரசு ஆணையிட இருக்கிறது. ஒன்றிரண்டு நாட்களில் அரசு ஆணையிடும். ஆணையிட்ட பிறகு அது தூத்துக்குடியில் இயங்கும். இதற்கு சுப்ரீம் கோர்ட்டிற்கோ மற்றக் கோர்ட்டிற்கோ செல்லத் தேவையில்லை. இதில் அரசே மாண்புமிகு புரட்சித்தலைவியே முடிவெடுக்கலாம். எடுத்து விட்டார். சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடியில் நீதி மன்றங்கள் விரைவில், வெகுவிரைவில் அமைய அரசு ஆணையிட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]